# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட/இரண்டாம் அரையாண்டு பொது மற்றும் சிறப்பு கலைமாணித்தேர்வு
## (Repeat Examination)

## 2012/2013 (October/2015)

## ECO/S 3201 Applied Economics

**நேரம்: 03 மணித்தியாலங்கள்**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

01. **(அ)** சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களையும், தளம்பல் நிலமைகளையும் அதற்கான காரணங்களையும் ஆராய்க.

(13 புள்ளிகள்)

**(ஆ)** அண்மையாண்டுகளில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான துறைசார் பங்களிப்பு எவ்வாறு காணப்படுகின்றது? ஆதாரங்களுடன் விளக்குக.

(12 புள்ளிகள்)

02. **(அ)** இலங்கைப் பொருளாதாரத்தில் விவசாயத் துறை பெறும் முக்கியத்துவத்தினை மிகப்பிந்திய புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(12 புள்ளிகள்)

**(ஆ)** சுதந்திரத்திற்குப் பின்னர் விவசாயத்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இலங்கை அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் எந்தளவு தூரம் வெற்றியடைந்துள்ளன என்பதனை வரலாற்றுரீதியாக விளக்குக.

(13 புள்ளிகள்)

03. **(அ)** இலங்கையின் வர்த்தக கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் கைத்தொழில் துறையில் ஏற்படுத்திய தாக்கத்தினை மதிப்பிடுக.

(12 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் கைத்தொழில் மயமாக்கமானது சரியான முறையில் இடம்பெற்றுவருகின்றதா? ஆதாரங்களுடன் விளக்குக. இலங்கையில் கைத்தொழில்மயமாக்கத்தினைத் துரிதப்படுத்த நீர் கூறும் ஆலோசனைகள் யாவை?

(13 புள்ளிகள்)

04. "இலங்கை சுதந்திரமடைந்த வேளையில் இலங்கைப் பொருளாதாரம் தவிர்க்க முடியாதவாறு பெருந்தோட்ட விவசாயத்தோடு பிணைக்கப்பட்டிருந்தது"

(அ) பெருந்தோட்டத்துறை தற்போது இலங்கைப் பொருளாதாரத்திற்கு வழங்கும் பிரதான பங்களிப்புக்களை விபரிக்குக. அரச பெருந்தோட்ட நிறுவனங்கள் தனியார்மயப்படுத்தப்பட்டமையினால் இத்துறையில் ஏற்பட்ட சாதகமான தாக்கங்களை ஆராய்க.

(12 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் பெருந்தோட்டத்துறை தற்போது எதிர்நோக்கும் பிரதான சவால்களை ஆராய்க.

(13 புள்ளிகள்)

05. சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் இலங்கைப் பொருளாதாரத்தில் பணவீக்கம் மற்றும் வேலையின்மையின் போக்குகளையும் அவற்றின் பொருளாதாரத் தாக்கங்களையும் வரலாற்றுரீதியாக ஆராய்க.

(25 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

(அ) இலங்கையின் பொருளாதாரத்தின் மீதான சனத்தொகை வளர்ச்சி வீதத்தின் தாக்கம்

(ஆ) இலங்கையின் உற்பத்திக் கட்டமைப்பிற்கு சேவைத்துறையின் பங்களிப்பு

(இ) பொருளாதார தாராளமயமாக்கமும் உள்நாட்டு விவசாய துறைமீதான அதன் பாதிப்பும்

(ஈ) 1978ன் பின்னர் இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள்

(உ) இலங்கையின் நலன்புரித்திட்டங்களிற்கான செலவும் அவற்றின் பொருளாதார விளைவுகளும்

(5x5 = 25 புள்ளிகள்)